# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2069/8 - 2018 මැයි 01 වැනි අඟහරුවාදා - 2018.05.01

***2069/8 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை***

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இல. J/ 198 - சுன்னாகம் நகர மத்தி கிராம அலுவலர் பிரிவில் சுன்னாகம் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.12.30 ஆம் திகதிய Ya / UDV/ 2016/ 308 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு A எனக் காட்டப்பட்ட சுமார் 0.3302 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

*01.* **துண்டு 'ஏ' - உலகிதேராபடமும், ஆண்டிச்சி குடியிருப்பும், ஆண்டியன் வளவும் குடியிருப்பும், ஆண்டிச்சி குடியிருப்பும் கிணற்றடியும் பெரியபுலமும் மறு பிரிவுகளும் - விஸ்தீரணம் : *0.3302* ஹெக்டயார்**

வடக்கு : கந்தசாமி உலகநாதன் உரிமை கோரும் பெயர் அறியாத காணி மற்றும் அடிப்பாதை; கிழக்கு: அடிப்பாதை, பாலசிங்கம் சஞ்சீவ் உரிமை கோரும், பெயர் அறியாத காணி மற்றும் அடிப்பாதை; தெற்கு : அடிப்பாதை மற்றும் உரிமை கோருவர் மற்றும் பெயர் அறியாத காணி; மேற்கு : உரிமை கோருபவர் மற்றும் பெயர் அறியாத காணி, குணரத்தினம் சுதாகரன் மற்றும் மனைவி, நிஜருபி உரிமை கோரும் மற்றும் பெயர் அறியாத காணி மற்றும் கந்தசாமி உலகநாதன் உரிமை கோரும் பெயர் அறியாத காணி.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/4/2016/எல்ஓ/374.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, ஏப்பிறல் 06.

5 - 426